From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.12/2014

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Ramu | Father/Husband Name | : Kattu raja |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 19.12.2023 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

எதிரிகள் ஆஜர். இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் கீழையூரில் குடியிருந்து வருகிறேன் நான் விவசாய வேலை செய்கிறேன். என்னுடைய முதல் கணவரின் பெயர் முத்துக்குமார் ஆவார். தற்போது 2வது கணவர் பெயர் காட்டுராஜா ஆவார். கடந்த 2007ம் ஆண்டு எனக்கும் முத்துக்குமார் என்பவருக்கும் நல்ல சுக்காம்பட்டியில் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு எனது உறவினர்கள் மற்றும் முத்துகுமார் உறவினர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு 10 பவுன் நகை, பணடம் பாத்திரங்கள் எனது வீட்டிலிருந்து எதிரி முத்துக்குமாருக்கு கொடுத்தார்கள். திருமணம் முடிந்து சாந்தமங்களத்திலுள்ள எங்கள் சின்ன மாமியார் சின்ன பிள்ளை என்பவர் வீட்டில் கணவர் மணைவியாக 6 மாதமாக குடியிருந்துவந்தோம். எனது மாமியார் குப்பச்சி, நாத்தினா பஞ்சு, எனது மச்சான் அழகு ஆகியோர் என்னை ஏன் எங்க இருக்கிறாய் என்று கொடுமைப்படுத்தினார்கள் எனது கணவர் அடிக்கடி குடித்துவிட்டு வந்து என்னை கம்பால் அடித்து எனது துணியை உருவிவிடுவார். அதனால் நான் எனது மாமியார் வீடான புறண்டிப்பட்டியில் குடியிருந்து வந்தோம்.அங்கையும் வைத்து என்னை அடித்தார். எனக்கு அப்போது 2 மாதம் கர்ப்பமாக இருந்தோன் அதுவும் கலைந்துவிட்டது. மேலூரில் உள்ள பூபதி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். பின்னர் எனது கணவர் உடன் சாத்தமங்களத்திற்கே வந்துவிட்டேன். பின்னர் எனது கணவர் நாங்கள் கொடுத்த 10 பவுன் நகையை அடகு வைத்து வெளிநாட்டிற்கு சென்றுவிட்டார். அவர் வெளிநாட்டிலிருந்து பணம் ஏதும் அனுப்பவில்லை. எனது

மாமியார் மற்றும் நாத்துனார், மச்சான் ஆகியோர் கொடுமைப்படுத்தியால் எனது தாய் வீடான நல்லசுக்காம்பட்டிக்கே சென்றுவிட்டேன். பின்னர் எனது கணவர் முத்துக்குமார் வேறு ஒரு திருமணம் செய்துவிட்டார். ஆஜர் எதிரியை தான் திருமணம் செய்தா. ஆஜர் எதிரியை அடையாளம் காட்டினார். எனக்கு திருமணத்திற்காக 10 பவுன் வாங்கியதற்காக மழுவேந்தி என்பவர்தான் நிதி உதவி செய்தார். நாங்கள் ஏழை என்பதால் அவர் நெருங்கிய உறவினர் என்பதால் உதவி செய்தார். பின்னர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். **அந்த புகார் மனு அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

நீங்கள் 2வது திருமணம் எந்த வருடம் செய்துகொண்டிர்கள் என்றால் 5 வருடத்திற்கு முன்பாக 2வது திருமணம் செய்துகொண்டேன். உங்களுக்கும் 1வது எதிரியான முத்துக்குமாருக்கும் இடையில் நடந்த திருமணத்தை பொருத்து விவாகரத்து தீர்ப்பு பெற்று நீங்கள் 2வது திருமணம் செய்து கொண்டிர்களா என்றால் முத்துக்குமார்தான் முதலில் திருமணம் செய்துகொண்டார். அதற்கு பின்பு தான் நான் திருமணம் செய்துகொண்டேன். நீங்கள் நீதிமன்றத்தின் மூலம் விவாகரத்து பெறாமல் திருமணம் செய்துகொண்டிர்களா என்றால் இல்லை. உங்களால் இந்நீதிமன்றத்தில் உங்களுக்கும், உங்கள் மகளுக்கும் ஜீவானம்சம் கோரி எம்.சி 14-2013 வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் சரிதான். எம்.சி. 14-2013ல் உங்களால் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். எம்.சி. 14-2013 உங்களால் தொடர்ந்து நடத்தவில்லை என்றால் தவறு நான் வழக்கிற்கு தவறாமல் வந்தேன். எதிரிகள் தான் வரவில்லை. எம்.சி 14-2013 வழக்கில் எதிரி தரப்பில் எ.ம.சா,1 ஆக விசாரணை செய்யப்பட்ட நிலையில், மேற்படி எ.ம.சா.1யை உங்கள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்வில்லை என்றால் சரியல்ல. எம.சி.14-2013 வழக்கில் எதிரிகள் தொடர்ந்து ஆஜராகி வந்தார்கள் உங்களால இவ்வழக்கிற்காக எதிரிகள் ஆஜராகவில்லை என்று பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. உங்களுடைய திருமணம் 23.08.2007ம் தேதி பூதமங்களம் சேகரம், நல்ல சுக்காம்பட்டியில் உங்களுடைய இல்லத்தில் தான ் திருமணம் நடந்தது என்றால் சரிதான். திருமணம் முடிந்து உங்கள் கணவரான 1வது எதிரி எவ்வளவு நாட்கள் கழித்து வெளிநாட்டிற்கு சென்றார் என்றால் 6 மாதம் கழித்து சென்றார். 24.06.2008ல் 1வது எதிரி வெளிநாட்டிற்கு சென்றால் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. 18.05.2010ல் தான் 1வது எதிரி வெளிநாட்டிலிருந்த ஊருக்கு திரும்பினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உங்களுடைய மகள் சிந்துநதி தும்பப்பட்டியில் உள்ள ஆரம்ப சுகாதரநிலையத்தில் 08.05.2010ம் தேதி பிறந்தார் என்றால் சரிதான். உங்களுடைய மகளின் பிறப்பு சான்று விசாரணை அதிகாரியிடம் கொடுத்தீர்களா என்றால் யாருக்கு பிறந்த மகள் என்று எதிரிகள் என்னை கேவலப்படுத்தியதால் நான் கொடுக்கவில்லை.

உங்களது பிறப்பு சான்று ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து வாங்கியுள்ளீர்களா என்றால் வாங்கியுள்ளேன். உங்களுக்கும் 1வது எதிரியான கணவர் முத்துக்குமாருக்கும் ˙திருமணம் நடந்து 2 மாத காலத்தில் நீங்கள் வேறு நபருடன் சென்று குடும்பம் நடத்தி வந்தீர்கள் என்று சொன்னால். அது பொய் அது சரியல்ல. உங்களுடைய மகளின் பிறப்பு சான்றிதழில் தகப்பனார் என்ற காலத்தில நீங்கள் குடும்பம் நடத்தி வந்த பெயர் இருந்த காரணத்தினால்தான் அந்த பிறப்பு ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது பொய் அது சரியல்ல. உங்களால் மகள் என்று சொல்லக்கூடிய வாரிசு 1வது எதிரிக்கும் உங்களுக்கு பிறந்த வாரிசு என்று சொன்னால் நீங்கள் சொல்வது தவறு. எதிரிகள் உங்களை கொடுமை செய்வததாவும், துண்புறுத்தியதாவும் சொல்வது அனைத்து எதிரிகளை மிரட்டுவதற்காகவும், உங்களுடைய பொய் வழக்கிற்காக ஆதரவாகவும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் இல்லை அவ்வாறு சொல்வது தவறு. 1வது எதிரிக்கும் 5வது எதிரிக்கும் இடையில் எந்ததேதியில், எப்போது, எந்த இடத்தில் யார் முன்னிலையில் திருமணம் நடந்தது விவரம் உங்களுக்கு ஏதும் தெரியாது என்று சொன்னால் சரிதான். பின்னாடிதான் தெரிந்துகொண்டேன். நீங்கள் சொல்வது போல் 1வது எதிரிக்கும் 5வது எதிரிக்கும் இடையில் எப்போதும், எந்த காலத்திலும் திருமணம் நடந்ததில்லை என்றால் அது பொய். திருமணம் நடந்தது உண்மை. உங்களுக்கு எதிராக எதிரிகளால் சொல்லிய குற்றசாட்டிலிருந்து தப்பிப்பதற்காக பொய் சாட்சியளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், உங்களுடைய சாட்சியம் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.12/2014

Deposition of witness for: PW - 2

Name : Petchiyammal Father/Husband Name : Rajendran

| | | | |
|---|---|---|---|
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 19.12.2023 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

எதிரிகள் ஆஜர். இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் கீழையூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். அ.சா1 ராமு எனது மகள் ஆவார். எனது மகள் ராமுவை 2007 ஆண்டு புறண்டிபட்டியை சேர்ந்த முத்துக்குமார் என்பவருடன் பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் நடந்தது. திருமணத்திற்காக 10 பவுன் நகை மற்றும் சீர்வரிசைகள் செய்தோம். திருமணம் முடிந்து சாத்தமங்களத்திலுள்ள சின்னபிள்ளை என்பவர் வீட்டில் கணவர் மணைவியாக வாழ்ந்து வந்தார்கள். நாத்தனார் பஞ்சு, ஊதைத்துரை என்ற முருகன், கனேசன், சேவகன் மகன் அழகு, குப்பச்சி ஆகியோர் எனது மகளை துண்புறுத்தினார்கள். அதற்கு முத்துக்குமாரிடம் சொன்னதற்கு எனது அம்மா, தங்கை, எனது மைத்துனர்கள் அப்படித்தான் துண்புறுத்துவார்கள் நீதான் அமைதியாக போக வேண்டும் என்று சொன்னார். ஊமைத்துரை என்ற முருகன் சாப்பாடு கொடுக்க முடியாது என்றும் உனது தாய் வீட்டிற்குதான் செல்ல வேண்டும் என்று துண்புறுத்தினார்கள். எனது மகளை விரட்டியடித்தார்கள். மேற்படி சம்பவம் அனைத்தும் திருமணம் முடிந்து 1 1/2 கழித்து நடந்தது. எனது மகள் 3 மாத கர்ப்பமாக எனது வீட்டில் இருந்தார். அதையும் பார்பதற்கு முத்துக்குமார் மற்றம் மாமியார், நாத்தனார் வரவில்லை. எனது மகளை கூப்பிடவும் வரவில்லை, கொடுத்த 10 பவுன் நகையையும் தரவில்லை. சீர்வரிசையையும் தரவில்லை. இதுசம்மந்தமாக எனது மகள் போலீஸில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்குவிசாரணை (எதிரிகள் தரப்பில்)**

நான் பூதமங்களத்தில் தான் பிறந்தேன் என்றால் சரிதான். உங்களது கூட பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 3 பேர். நாகராஜன், சொக்கர், சுரங்கமலை மற்றும் நானும். உங்களுடன் பிறந்தவர்களோடு சுமுக உறவில்தான் இருக்கிறீர்களா என்றால் ஆமாம். நாகராஜனுக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்றால் 3 பேர். சிலம்பரசன், தமிழரசன், தமிழரசி ஆவார்கள். நீங்களும் உங்கள் குழந்தைகளும், உங்கள் பிறந்த வீட்டிற்கு சென்று வருவீர்கள் என்றால் சரிதான். 1வது எதிரி

வெளிநாட்டிற்கு செல்லும் சமயத்தில் அ.சா1 ஆன உங்கள் மகள் 3 மாத கர்ப்பமாக இருந்தார் என்றால் சரிதான். அவ்வாறு அ.சா1 கர்ப்பமாக இருந்த காலகட்டத்தில் தான் உங்கள் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் ஆமாம். மேற்படி அ.சா.1 கர்ப்பமாக இருந்து அதன்மூலம் பிறந்த குழந்தைதான் சிந்துநதி என்றால் சரிதான். குழந்தை பிறந்து எவ்வளவு நாட்கள் கழித்து 1வது எதிரி முத்துக்குமார் வெளிநாட்டிலிருந்து ஊருக்கு வந்தார் என்றால் 1 வருடம் கழித்து வந்தார். உங்கள் மகளான அ.சா1 திருமணம் முடிந்து 3 மாத காலத்திலேயே உங்கள வீட்டிற்கு திரும்பிவிட்டார் என்றும், 1வது எதிரி வெளிநாட்டிற்கு சென்ற பிறகு 3 வருடம் கழித்துதான் அ.சா.1ற்கு சிந்துநதி என்ற வாரிசு பிறந்தது என்று சொன்னால் அது சரியல்ல அது பொய். உங்கள் மகளான அ.சா.1ற்கு தும்பைப்பட்டி அரசு மருத்துவமனையில் குழந்தை பிறந்தது என்றால் ஆமாம். தும்பைப்ட்டி அரசு மருத்துவமனையில் அ.சா.1ற்கு பிறந்த குழந்தை விவரம் குறித்து எழுதிக்கொண்டார்கள் என்றால் ஆமாம். குழந்தை குறித்த விவரங்கள் தும்மைப்பட்டி அரசு மருத்துவமனையில் அ.சா.1தான் சொன்னார் என்றால் ஆமாம். தும்பைப்பட்டி அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தை குறித்த விவரங்கள் அ.சா1 மருத்துவமனையில் தகப்பனார் பெயர் குறித்து என்ன சொன்னார் என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா1ற்கு பிறந்த குழந்தையின் பெயர் தகப்பனார் பெயர் நாகராஜன் மகன் சிலம்பரசன் என்றுதான் உங்களது மகளான அ.சா.1 ஆல் சொல்லப்பட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. சிலம்பரசன் என்பவர் உங்கள் சகோதரான நாகராஜன் என்பவரின் மகன் என்றால் சரிதான். உங்கள் மகளான அ.சா 1 ஆல் பெற்றுக்கொள்ளப்பட்ட குழந்தைக்கும் 1வது எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா1 ஆல் பெற்றுக்கொள்ளப்பட்ட குழந்தையானது 1வது எதிரி வெளிநாட்டிற்கு சென்று 3 வருடம் கழித்து பிறந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளால் உங்கள் மகளான அ.சா1யை கொடுமை செய்ததாகவும், விரட்டி துரத்தியதாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்லப்பட்டது என்றால் சரியல்ல. உங்கள் மகளான அ.சா1ற்கு திருமணத்திற்கு போட்ட நகைகள், சீர்வரிசைகள் அனைத்தும் உங்கள் வசம் தான் இருந்து வருகிறது என்றும், ஜீவானம்சம் வழக்கின்போது சில சீர்வரிசைகள் திரும்ப ஒப்படைக்கப்பட்டது என்றும் அவைகளை மறைத்து அ.சா1ம் நீங்களும் பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் அ.சா 1யை துண்புறுத்தியதாக இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்லி சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் நீங்கள் சொல்வது பொய், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும், உங்களுடைய சாட்சியம் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.